DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.59/2026

PW - 6

| | | |
|---|---|---|
| Name | : | மாரியப்பன் (Lw - 8) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 14.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், பளையபாளையத்தில் குடியிருந்து கூலிவேலைசெய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

தேதி நினைவில் இல்லை. சுமார் 5 – 6 மாதங்களுக்கு முன்னர் நான் பளையபாளையத்தில் உள்ள டீ கடையில் டீ குடித்து கொண்டிருந்தபோது வடக்கே திடீர் என சத்தம் கேட்டது. நான் என்னவென்று பார்த்தபோது அங்கு இருந்த ஆலமரத்திற்கு அருகே கார் ஒன்று கவிழ்ந்த நிலையில் இருந்தது. காரில் இருந்த நபர்களை அருகில் இருந்தவர்கள் வெளியில் மீட்டார்கள். பின்பு காரில் இருந்த மாராயி என்பவருக்கு நெஞ்சுவலி இருப்பதாக கூறினார். பின்பு அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானவர் போலிசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணைக்கு அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் என்னை விசாரித்தபோது கடந்த 30.011.2025ம் தேதி காலை 10.00 மணியளவில் நான் பளையபாளையம் பஞ்சாயத்து ஆபிஸ் அருகே உள்ள மளிகை கடையில் இருந்தபோது தெற்கில்இருந்து வடக்கு நோக்கி வந்துகொண்டிருந்த காரை அதன் ஓட்டுநர் கவனக்குறைவாக ஓட்டி வந்ததால் காரானது கட்டுப்பாட்டை இழந்து அங்கு இருந்த பள்ளத்தில் விழுந்துவிட்டது என சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**